ஏனைய விடயங்களின் விலை அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் அரிசியில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் குறைவாக இருந்தன. 1982ஆம் ஆண்டிலிருந்தும் அரிசியின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது. முன்னைய ஆண்டினைப்போன்றே 1983ஆம் ஆண்டிலும் அரிசியின் சில்லறை விலைகள் 5 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன.

தாழ்நில, உயர்நில மரக்கறிகள் இரண்டினதும் விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. உயர்நில மரக்கறிகளைப் பொறுத்தவரை அவற்றின் அதிகரிப்பு வீதம் 1982 ஆம் ஆண்டினைப் போன்றே 16 சதவீதமாக இருந்தவேளையில் தாழ்நில மரக்கறிகள் 1982ஆம் ஆண்டின் 18 சதவீதத்துடனும் அதற்கு முன்னைய ஆண்டின் 9 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 25 சதவீதம் கொண்ட பெருமளவுஅதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இது தாழ்நில மரக்கறிகளுக்கான அதிகரித்த விலைப்போக்கினை எடுத்துக்காட்டியது.

கடல் மீன், இறைச்சி என்பவற்றில் விலைகள் அதிகளவில் அதிகரித்தபோதும் இவ்விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் 1982ஆம் ஆண்டின் விலைகளைவிடக் குறைவாகவே இருந்தன. கடல் மீனின் விலைகள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீதத்தால் அதிகரித்தன. இறைச்சியின் சராசரி சில்லறை விலைகள் முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் உயர்ந்தன. செத்தல் மிளகாயின் விலை 8 சதவீதத்தால் மிதமாக அதிகரித்தது.

42 சதவீத அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்ட தேங்காயில் பெருமளவு அதிகரிப்பு விலை 1982 இற்கும் 1983 இற்கும் இடையில் அவதானிக்கப்பட்டது. இதுமுன்னைய ஆண்டில் ஏற்பட்ட 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறானதாக இருக்கிறது. குறிப்பாக இறுதி இரண்டு மாதங்களிலும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தெங்கு உற்பத்திகளுக்கான உயர்ந்த ஏற்றுமதி விலைகள் ஆகியன இதன் விலைகளில் ஏற்பட்ட உயர்விற்குப் பொறுப்பாக இருந்தன.

### கூலிகள்

1983இல் சாதாரண கூலிகள் நன்கமைந்த, நன்கமையாததுறைகள் இரண்டிலும் அதிகரித்தன. நன்கமையாத துறையில் குறிப்பாக நெல்லிலும் இறப்பரிலும் 1983இல் ஏற்பட்ட சாதாரண கூலி அதிகரிப்புக்கள் 1982 இனைவிடக் கூடுதலாக இருந்தன. நன்கமைந்ததுறையில் பணக்கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் 1982 ஆம்ஆண்டின் அளவினைவிடக் குறைவாக இருந்ததுடன் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினுல்* பிரதிபலிக்கப்பட்டவாறு விலை அதிகரிப்புக்களை ஈடுசெய்யப்போதுமானதாகவும் இருக்கவில்லை.


---

* நாட்டின் கிராமிய, பெருந்தோட்டத் துறைகளில் பெறப்பட்ட கூலிகளுக்கு கொழும்பு தொழிலாளர் வகுப்புக்களின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணில் பொருத்துவதற்கு இது பெருமளவிற்கு நம்பத்தகுந்ததாக இல்லாமையால், உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்கு நன்கமையாத துறையிலுள்ள பணக்கூலிகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினுல் சுருக்கப்படவில்லை.

## கூலிவீதச் சுட்டெண்கள்

*1978 திசெம்பர் = 100*

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

நன்கமைந்த துறையில் அரச ஊழியர்களுக்கும், கூலிநிர்ணய சபைக்குட்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்குமான பணக்கூலிகள் அதிகரித்தன. கடந்த இரண்டு ஆண்டுகளையும் போன்று அரச துறையின் பணக்கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு தனியார் துறையினதிலும் பார்க்க உயர்வானதாக இருந்ததுடன் ஒரு சில வகைகளைத் தவிர 1980ஆம் ஆண்டிலிருந்தும் ஏற்பட்ட அதே அதிகரிப்புத்தன்மைகளையே பிரதிபலிக்கிறது. நன்கமைந்த துறையிலுள்ள தொழிலாளர்களின் வேறுபட்டவகைகளுக்கான பெயரளவு கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் அட்டவணை 1.33இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1.33

**நன்கமைந்த துறையின் கூலிவீத சுட்டெண்கள்**

**1978 திசெம்பர் = 100**

| நன்கமைந்ததுறை | கூலிவீத சுட்டெண் | | புள்ளி மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| | 1982 | 1983 | | |
| 1. கூலிகள் நிர்ணய சபைகளின் கீழான தொழிலாளர்கள் .. | 175.8 | 188.3 | 13.0 | 7.4 |
| i. வேளாண்மையில் உள்ள தொழிலாளர்கள் ... | 181.2 | 198.7 | 17.5 | 9.7 |
| ii. கைத்தொழில் வர்த்தகம் ஆகிய வற்றில் உள்ள தொழிலானர்கள் . | 161.0 | 163.1 | 2.1 | 1.3 |
| iii. பணிகளில் உள்ள தொழிலாளர்கள் | 169.7 | 177.8 | 8.1 | 4.8 |
| 2. எல்லா அரசாங்க ஊழியர்கள் .. | 187.8 | 215.7 | 27.9 | 14.9 |
| i. எல்லா நிறைவேற்றுதரம் அல்லாத அலுவலர்கள் .. | 180.6 | 204.6 | 24.0 | 13.3 |
| ii. எல்லா சிற்றூழியர்கள் .. | 194.7 | 226.2 | 31.5 | 16.2 |
| 3. அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 166.4 | 188.1 | 21.7 | 13.1 |

மூலங்கள்: தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

பள்ளிக்கூட ஆசிரியர்களை உள்ளடக்கும் அரசதுறையைப் பொறுத்தவரையில் இழப்புக்கள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படும் ஒவ்வொரு புள்ளி அதிகரிப்பிற்கும் ரூ. 2 என்ற வீதத்தில் வாழ்க்கைச்செலவுச் சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்டிருந்தமை மாதமொன்றிற்கு ரூ. 140 இனைக் கொண்ட மட்டத்தில் 1983 பெப்புருவரியில் நிறுத்தப்பட்டது. அத்துடன் 1983 மாச்சிலிருந்தும் ஓய்வுபெற்றோர் உட்பட மாதமொன்றிற்கு ரூ. 1,000 இற்கும் குறைவான சம்பளம் பெறும் அனைவருக்கும் மாதமொன்றிற்கு ரூ. 100 கொண்ட மேலுமொருபடி வழங்கப்பட்டது. இது செத்தெம்பரிலிருந்தும் மாதமொன்றிற்கு ரூ. 106 இற்கு உயர்த்தப்பட்டதுடன் அனைத்து அரச ஊழியர்களையும் உள்ளடக்கத்தக்கவிதத்தில் விரிவாக்கப்பட்டது. இதனால் 1983 செத்தெம்பரிலிருந்தும் மொத்த வாழ்க்கைச் செலவு இழப்பீடுகள் மாதமொன்றிற்கு ரூ. 246 வரைக்கும் கூட்டப்பட்டதுடன் அரச பணியிலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது.

அரசதுறை ஊழியர்களின் சராசரி பணக்கூலி 1983 ஆம் ஆண்டில் 15 சத வீதத்தால் அதிகரித்தபோதும் இது 1982 இன் வீதத்திலேவிடக் குறைவாகவே இருந்தது. நிறைவேற்றுத்தரம் அல்லாத அலுவலர்கள் சிற்றூழியர்கள், அரசபள்ளிக் கூட ஆசிரியர்கள் ஆகியோரின் கூலிகள் முறையே 13, 16, 13 சதவீதங்களால் அதிகரித்தன. எனினும், இவ்வதிகரிப்புக்கள் 1982ஆம் ஆண்டின் அதிகரிப்பு வீதங்களேவிடக் குறைவாகவே இருந்தன. முழுமையாகப் பார்க்கையில், அரச துறை ஊழியர்களின் சராசரி உண்மைக் கூலிகள் 1983 ஆம் ஆண்டில் 0.9 சத வீதத்தால் சிறிதளவாக அதிகரித்தது, இது 1982* ஆம் ஆண்டில் உண்மைக் கூலி களில் ஏற்பட்ட 16 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறுனதாக இருக்கின்றது. 1983ம் ஆண்டிற்கான நிறைவேற்றுத்தரம் அல்லா அலுவலர்கள், அரச பள்ளிக் கூட ஆசிரியர் ஆகியோரினது உண்மைக் கூலிகள் முறையே 0.4 சதவீதத்தாலும், 0.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்த வேளேயில் சிற்றூழியர்கள் உண்மைக் கூலி கள் 2 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், 1982ஆம் ஆண்டுப் பகுதியில் அனைத்து மூன்று வகைகளினதும் உண்மைக் கூலிகள் அதிகரித்தன.

கூலி நிர்ணய சபையினுல் உள்ளடக்கப்பட்ட நன்கமைந்த தனியார்துறையில் சராசரிப் பணக் கூலிகள் 1982 ஆம் ஆண்டின் 16 சதவீதம் கொண்ட அதிகரிப் புடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் அதிகரித்தன. உண்மைக் கூலிகள் 1982 ஆம் ஆண்டின் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாருக 1983 இல் 6 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்தன.

நன்கமைந்த தனியார் துறையில், கைத்தொழில், வர்த்தகம், வேளாண் மைப் பணிகள் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்களின் பணக்கூலிகள் 1983 ஆம் ஆண்டில்முறையே 1. 3 சதவீதம் 10 சதவீதம், 5 சத வீதங்களால் அதிகரித்தன. இவ்வதிகரிப்புக்கள் 1982 ஆம் ஆண்டின் அதிகரிப்புக்களேவிடக் குறைவானதாகும். 1983 ஆம் ஆண்டில் உண்மைக் கூலிகள் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும், 11 சதவீதத்தாலும், வேளாண்மை பணிகள் துறைகளில் முறையே 8 சதவீதத் தாலும், 4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. இது 1982 ஆம் ஆண்டில் வேளாண்மை பணிகள் துறைகளில் ஏற்பட்ட உண்மைக் கூலிகளின் அதிகரிப் பிற்கு மாறுனதாகும்.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI L

---

* 1982 ஆம் ஆண்டிற்சான அறிக்கை அதிகரிப்பு 19 சதவீதமாக இருந்தமையை எடுத்துக் காட்டியது. இது 1952 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு (1952 - 100) மதிப்பிடப்பட்டது. 1983 ஆம் ஆண்டுக் காலத்தில் சுட்டெண் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டதுடன் 1978 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகப் (1978 - 100) பயன்படுத்தப்பட்டது.

அட்டவணை 1.34

**நன்கமையாத துறையின் சராசரி நாளாந்த கூலி வீதங்கள்**

| நன்கமையாத துறை | தொழிலாளர் வகை | நாளாந்த கூலி வீதம் | | ரூபா மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | | 1982 | 1983 | | |
| நெல் ... | ஆண் | 30.66 | 36.61 | 5.95 | 19 |
| | பெண் | 22.26 | 26.94 | 8.42 | 21 |
| தெங்கு ... | ஆண் | 32.39 | 37.78 | 2.26 | 17 |
| | பெண் | 18.26 | 21.52 | 3.26 | 18 |
| இறப்பர் ... | ஆண் | 26.22 | 31.08 | 6.63 | 18 |
| | பெண் | 18.88 | 22.30 | 3.42 | 18 |
| தேயிலை ... | ஆண் | 22.17 | 23.81 | 1.64 | 7 |
| | பெண் | 15.86 | 16,78 | 0.92 | 6 |
| தச்சுவேலை ... | ஆண் | 53.86 | 59.94 | 6.08 | 11 |
| கொத்தனார் வேலை ... | ஆண் | 52.44 | 58.31 | 5.66 | 11 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

நன்கமையாத தனியார் கூலிகளின் நடத்தை மத்திய வங்கியின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின்கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளினால் கணிக்கப்பட்டது. நெல், தெங்கு, இறப்பர், தேயிலை ஆகியவற்றின் சிறு உடைமைப் பயிர்ச்செய்கையாலும், கட்டுமானத்துறையிலுமுள்ள தொழிலாளர்களின் நாளாந்தக் கூலிகள் மீதான ஒழுங்கான அடிப்படைத் தகவல்களை இத்திட்டம் சேகரிக்கின்றது.

1983ஆம் ஆண்டில் அனைத்து துணைத்துறைகளிலும் பெயரளவு கூலிகள் அதிகரித்தவேளையில் பெருமளவு அதிகரிப்புக்கள் நெல், இறப்பர், துணைத்துறைகளில் காணப்பட்டன. நெல்துறையிலுள்ள பெண் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி வீதம் 21 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் ஆண் தொழிலாளர்களின் கூலி வீதங்கள் 19 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பர் பயிர்ச்செய்கையில் ஆண் பெண் தொழிலாளர்களின் கூலிகள் 18 சதவீதத்தால் அதிகரித்தன. தெங்கு, தேயிலைத் துணைத்துறைகளில் பெண் தொழிலாளர்களின் கூலிவீதங்கள் ஆண் தொழிலாளர்களைப் போலன்றி 1982 ஆம் ஆண்டிலும் பார்க்க உயர்ந்த விகிதத்தில் அதிகரித்தன. கட்டுமானத் துறையில் தச்சுவேலை, கொத்தனார் வேலைக்கான கூலிகள் 1982 ஆம் ஆண்டிலும் பார்க்க குறைவான வீதத்தில் அதிகரித்தன. அட்டவணை 1. 34 சராசரி நாளாந்தக் கூலிவீதங்களையும் 1982 இற்கும் 1983ஆம் ஆண்டிற்கும் இடையிலுள்ள மாற்றங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

## வர்த்தகம்

கடந்த சில ஆண்டுகளின் மந்த நிலையிலிருந்து அபிவிருத்தியடைந்த நாடுகள் படிப்படியாக மீட்சியடைந்தமையும் தேயிலை, இறப்பர் விலைகளில் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டமையும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக செயலாற்றம் 1983ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகின்றமைக்குக் காரணங்களாகும்.